23 JUN 2000
மாநகராட்சி பொது நூலகம்

பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

திருவள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 8 வியாழக்கிழமை (22 - 06 2000) VALAMPURI ஒலி: 185

★ வடக்கு-கிழக்கு இணைப்பு

# சர்வஜனவாக்கெடுப்பு நடத்த ஐந்து தமிழ்க்கட்சிகள் எதிர்ப்பு

## நேற்று மாலை கூடித் தீர்மானம்

(கொழும்பு விசேட நிருபர்)

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக அரசாங்கம் நடாத்த உத்தேசித்திருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை அரசு நிறுத்த வேண்டுமென நேற்றுமாலை கொழும்பில் கூடிய ஐந்து தமிழ்க்கட்சிகளும் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளன.

இத்தீர்மானம் அரசுக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை கொழும்பில் ரெலோ அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்தில், ஈ.பி. ஆர்.எல் எவ்., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன,

இக்கூட்டத்தில் புளொட், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன

(6ஆம் பக்கம் பார்க்க)

## புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்கப்பல் மூலம்கொழும்பு செல்லும்நோயாளர்கள், உதவியாளர்கள் அனைவரும்பாதுகாப்புச் சேவையின் அனுமதி பெற்று, அதன் பின்பு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் காரியாலயத்தில் பதிவு செய்து பணிப்பாளர் உறுதிப்படுத்திய பின்பேகொழும்புசிகிச்சைக்கு செல்லலாம் என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

[6ஆம் பக்கம்பார்க்க]

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் மேலும் தளர்த்தப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 20 ஆம் திகதி முதல் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும்.

இதேவேளை

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டு மீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல்படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [ச-வ]

# இல. தமிழர்களுக்கு முழுமையான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்

## ஜி. கே. மூப்பனார் கருத்து

(சென்னை)

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு முழுமையான உரிமைகள் வழங்கப்படும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று தமிழ மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக கோயம் புத்தூர் விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசும் போது அவர் மேலும் கூறியதாவது;

இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதப்படக் கூடாத நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசு மேற்கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து கருத்து தெரிவித்த மூப்பனார் ஜனாதிபதி சந்திரிகாவும், விடுதலைப் புலிகளும் கேட்டுக் கொள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு நீதி, நேர்மையான தேர்தல் நடத்துக

(கொழும்பு)

பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்தவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த யோசனையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துவிட்டு நீதியானதும், நேர்மையானதுமான பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## குண்டு பிடிபட்டது.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திருமலை வீதியில் நேற்றுக் காலை இராணுவத்தினரைக் குறிவைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை எல்லையிலுள்ள பிள்ளையாரடி என்ற இடத்திலேயே இக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வீதியில் முன்னர் பல குண்டுகள் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-வ)

## திருமலையில்ரோந்துப் படையினாமீது தாக்குதல் 5பேர் பலி 4பேர் காயம்

(திருமலை)

திருமலையில் ரோந்து சென்ற படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டும், 4 படையினர் காயமடைந்துமுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை சிறி மங்களபுர என்ற இடத்தில் கந்தளாய் சேருவல என்ற வீதியில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிலாபம் பகுதியில் தேடுதல் இருபத்தேழு தமிழர் கைது

(கொழும்பு)

சிலாபம் முன்னேஸ்வரம் பகுதிகளில் நேற்று அதிகாலை தேடுதல் நடத்திய பொலிஸார் 27 தமிழர்களைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுள் ஒரு புது மணத்தம்பதிகளும் அடங்குவர்.

நேற்று அதிகாலை 4.30 மணி தொடக்கம் 7.30 மணி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்து ஒன்றில் யாழ். மாநகர சபை ஊழியர் ஒருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் நினைவிழந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப்பகல் இடம்பெற்ற இவ் விபத்தில் அருளப்பு ஹொக்காஸ் (வயது 56) என்பவரே படுகாயமடைந்தவராவார். (க-12)

## வீரசிங்கம் களஞ்சியத்தில் திருட்டு பொருட்கள் பிடிபட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் களஞ்சியப்படுத்துவதற்காக எடுத்து வரப்பட்ட அரிசி மூடைகளைத் திருடுவதற்கு எடுத்த முயற்சி நேற்று கையும் மெய்யுமாகப் பிடிபட்டது.

இச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது: குருநகர் களஞ்சியத்தில் திருட்டு இடம்பெற்றதையடுத்து அங்கிருந்த பொருட்களை வீரசிங்கம் மண்டபத்தில் களஞ்சியப் படுத்துவதற்காக லொறிகளில் அரிசிமூடைகள் எடுத்து வரப்பட்டன.

இவ்வாறு எடுத்துவரப்பட்ட அரிசி மூடையை இறக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகைகள் மீதான தணிக்கை ஜனாதிபதி 23ம் திகதி அறிவிப்பார்

(கொழும்பு)

பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்ட தணிக்கையை நீக்குவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாளை 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசின் நிலைப்பாட்டை அறிவிக்கப்போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பத்திரிகைகள் மீதான தடையை அகற்றுவதுதொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் கரு ஜெயசூரியா பத்திரிகைத் தணிக்கை தொடர்பாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார் (வ)

## குமாரை கொன்றவரை இனம்காண 3 நாளுக்குள் அடையாள அணிவகுப்பு

[கொழும்பு]

குமார் பொன்னம்பலத்தைக் கொலை செய்தவர் என்று சந்தேகிக்கப்படும் சாந்த எனப்படும் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ரணசிங்க என்பவரை அடையாளம் காண்பதற்காக இன்னும் 3 தினங்களுக்குள் அடையாள

(6ஆம் பக்கம் பார்க்க)

## பரியோவான், சுண்டுக்குளி கல்லூரிகளை இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளாக விளங்கும் யாழ் பரியோவான் கல்லூரி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றை மீண்டும்பழைய இடத்தில் இயக்குவதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென யாழ். சிவில்நிர்வாகஇணைப் பதிகாரி பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். சிவில். நிர்வாக அலுவலகத்தில் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பொன்றிலேயே மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டது. (க-3)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வயலின், தம்புரா, ஹார்மோனியம் நிப்பொண் 12'' கறுப்பு வெள்ளை T.V அன்ரனா பூஸ்ரருடன் M.D. 50 HONDA மோட்டார்சைக்கிள் தி. திருக்குமரன் வழக்கம்பறை வீதி, தொல்புரம் கிழக்கு சுழிபுரம். (1167)

### தவறிவிட்டது

இணுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்த இராசரத்தினம் ஞானச்செல்வன் என்பவருடைய அடையாள அட்டைகள் தே.அ.அ. இல.793324120V வி.அ.அ. இல. 090600945 இணுவில் பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் இணுவில் பேப்பர் கடையில் ஒப்படைக்கவும். [1159]

கைதடி தெற்கு, கைதடியைச்சேர்ந்த யோகலிங்கம் ஜெயசீலன் என்பவரின் தேசிய அடையாள அட்டை இல. 763053547V வி. அ. அ. இல- 091014937 என்பன யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டன கண்டெடுப்பவர்கள் வலம்புரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (1165)

விஜயரட்ணம் கமலநாதன் தெல்லிப்பழையானைக்குட்டி வளவு, தற்போது 76, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் வசிக்கும் எனது தேசிய அடையாள அட்டை இலக்கம் 501632394 V, விசேட அடையாள அட்டை இலக்கம் 090238085 ஆகியன நல்லூருக்கும், யாழ். ஆஸ் பத்திரிகரும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர், துர்க்காதேவி மணிமண்டபம்-நல்லூர் அல்லது திரேசா தளபாட மாளிகை, கஸ்தூரியார் வீதி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (1169)

புவனேந்திரன் - தனுஷா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல. 815021665V) விசேடஅடையாள அட்டையும் (இல. 0902001710) புவனேந்திரன் தங்கரத்தினம் என்பவருடைய பொலிஸ் றிப்போட்டும் தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாமில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (1176)

### கண்டெடுக்கப்பட்டது

ஒரு பெண்கள் கைக்கடிகாரம் கம்பஸ் வீதி, திருநெல்வேலியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- அன்னலிங்கம் குமாரசாமி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
(1158)

### புதிய பாடத்திட்டம் தரம்-10

ஆங்கிலம், சமூகக்கல்வி மேலதிக தமிழ் இலக்கியம் என்பன அலகு ரீதியாக பெற்றுக்கொள்ளலாம். கணேசன் கொம்மினிக்கேஷன், கே.கே.எஸ். றோட், கொக்குவில் சந்தி T.p 2585 [கி-540]

### விற்பனைக்குண்டு

13, K.V.A. லிஸ்ரர் ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1195)

---

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

சாவகச்சேரியைச் சேர்ந்த

**திரு தா. கதிர்காமநாதன் (இந்திரன்)**

(யாழ். போதனா வைத்தியசாலை)

22-06-2000 இன்று தனது பிறந்ததினத்தைக் கொண்டாடுகிறார்.
அவரை சகல வளங்களும் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

(1178) நண்பர்கள்

---

## இன்று முதல் பெறலாம்!

A/L 2000

கணக்கீட்டுப் பரீட்சையை எதிர்நோக்கி இருக்கும் மாணவர்களுக்கு

**அடிப்படைக் கிரயவியல்**

(நூல்)

D. SAM

கிடைக்கும் இடங்கள்:-

★ பூபாலசிங்கம் புத்தகசாலை
★ ஸ்ரீலங்கா புத்தகசாலை
★ D. M. I

(1175)

---

## எலைற் கல்வி நிறுவனம் (நல்லூர்)

கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில்.

தரம் 8,9,10,11, வகுப்புகள்
சனி, ஞாயிறு 8-12, 3-5

O/L DAY CLASS திங்கள் முதல் வெள்ளி 8-12 நடைபெறுகின்றன.

Bond புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை வழமை போல் ஒவ்வொரு ஞாயிறும் காலை 8.00 மணிக்கு நடைபெறும்.

நிர்வாகி
T. அற்புதராஜா

[1179]

---

## திருமறைக் கலாமன்றம்

யாழ்ப்பாணம்.

★ 2000-ஆம் ஆண்டுக்கான நாடகப் பயிலக வகுப்புக்கள் மீளவும் 24-06-2000 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. மாணவர்கள் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் ஒன்றுகூடவும்.

★ 26-06-2000 முதல் எமது யாழ். அலுவலகம் தொடர்புகளுக்காக திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணிவரை திறந்திருக்கும்.

★ ஜுலை மாதத்திற்கான வழிபாடும், ஒன்று கூடலும் 02-07-2000 ஞாயிறு காலை 10-30 மணிக்கு மல்லாகத்தில் (சிற்பக் கலைஞர் A. V. ஆனந்தனின் தொழிற் பயிற்சி நிலையத்தில்) இடம்பெறும்.

பொதுச் செயலாளர்,
திருமறைக்கலாமன்றம்.

(1172)

---

## 31வது நாள் நினைவினில்

மலர்வு 29-04-1934 — உதிர்வு 23-05-2000

**அமரர் முத்தர் இராசரத்தினம்**

(திருப்பணிச் செல்வர்)

முன்னாள் தலைவர் } தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் தேர்த் திருப்பணிச் சபை.
தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் பரிபாலன சபை.

எத்தனை நாட்கள் ஓடி மறைந்தாலும்
எங்கள் நெஞ்சம் உன்னை மறக்காது
திருப்பணிக்காய் நீ அரும்பணியாற்றியதை
வரலாறு என்றும் எண்ணிப் போற்றும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை
தில்லையம்பதி.

(1168)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் நீண்டகால சேவையாற்றி ஓய்வுபெறும ஆசிரியை

**திருமதி மே. யூ. மரியதாஸ்**

அவர்களின் அயராத சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கரம்பொன் சிறியபுஷ்ப மகளிர் ம. வி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள்.

(1182)

---

## லயன்ஸ் கழகம் சுன்னாகம்
## கண் மருத்துவ முகாம்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் கந்தரோடை ஐயனார் சனசமூக நிலையத்திலும், கோண்டாவில் மேற்கு இந்து மகாவித்தியாலயத்திலும் நடாத்திய கண் பரிசோதனை முகாமில் கண் பரிசோதனை செய்தும் மூக்குக் கண்ணாடி பெறத் தவறியவர்கள் தங்கள் கண் பரிசோதனை அறிக்கைகளை கீழ்வரும் இடங்களில் சமர்ப்பித்து பெயர்களை 26-06-2000 இற்கு முன் பதிவு செய்து கண்ணாடி பெறும் திகதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. லயன் என். அரசரத்தினம்
   நாகம்ஸ் பாட்டா நவீன சந்தை, சுன்னாகம்.
2. லயன் டாக்டர் கே. சிவராசா
   சிறிவிநாயகர் வைத்திய நிலையம் கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
3. லயன் டாக்டர் வி. யோகேஸ்வரன்
   அரசினர் வைத்தியசாலை, அளவெட்டி.

லயன் என். அரசரத்தினம்
தலைவர் லயன்ஸ் கழகம்,
சுன்னாகம்.

(கி/539)

---

## வளர்மதி கல்வி நிலையம்

மட்டுவில் தெற்கு

**தரம் 5 புலமைப் பரிசில் வகுப்புகள்**

மேற்படி வகுப்புக எதிர்வரும் 24.06.2000 சனி காலை9.00மணி தொடக்கம் சனி, ஞாயிறு தினங்களில் யாழ் மானிப்பாய்மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும் என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பு: வினாத்தாள்கள்வழங்கப்பட்டுஇலவசமாக வகுப்புகள் நடத்தப்படும்.

பொறுப்பாளர்
வே. அன்பழகன்
வளர்மதி கல்வி நிலைய
ஆரம்பப்பிரிவு

(1180)

---

## மரண அறிவித்தல்

திருமதி

**சின்னத்துரைக் குருக்கள்**

**அன்னம்மா**

சுழிபுரம்பறாளாய் ஈஸ்வர விநாயகர் தேவஸ்தான பிரதம குரு காலஞ்சென்ற சின்னத்துரைக் குருக்களின் அன்பு மனைவி அன்னம்மா 21-6-2000 சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலம் சென்றநாகேஸ்வரி, சிரோன்மணி அம்மா, புஸ்பராணி (மேற்பார்வையாளர் சிறுகைத் தொழில் திணைக்களம்) செல்வராணி, சோழியூரான் பிறைசூடிக் குரு (ஓய்வு பெற்ற ஆசிரியர்) கஜேணசானந்த குரு (ஓய்வு பெற்ற வரி உத்தியோகத்தரும் கணக்காளரும்) லலிதா, தங்கமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் சுகதாசசர்மா (லக்சபான தோட்டம்) புலவர் தட்சணமூர்த்தி (இந்தியா) நகுணதலசிங்கம் (யாழ்.மாநகரசபை உத்தியோகத்தர்) துரைசாமி ஐயர் (கைதடி பிரதேசசெயலகம்) நடராஜமூர்த்தி ஓவியர்) பத்மநாயகி தயாகௌரி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

ஈமைக்கிரியைகள் 22-06-2000மு.ப 10.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ந.ப12.00மணியளவில் பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சோழியூரான் பிறைசூடிக்குரு
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
சுழிபுரம்.

(1173)

# தடை, புறக்கணிப்புகளால் வன்னி விவசாய உற்பத்திகள் மிகப் பாதிப்பு

## கூ. ச. ஒன்றியம் அரசுக்கு மகஜர்

(வவுனியா)

வன்னிப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடை மற்றும் புறக்கணிப்புகளால் விவசாய உற்பத்திகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளமை குறித்து கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் மகஜர் ஒன்றை அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

''வன்னிப் பெருநிலப்பரப்பின் மொத்த சனத்தொகையில் 70 வீதத்திற்கு மேற்பட்டோர், விவசாயத்தையும் சுய தொழிலையும் நம்பி வாழ்கின்றார்கள்.

யுத்தத்தின் கொடுமைகள், போக்குவரத்து சிரமம், பொருட்களின் விலை உயர்வு என்பன ஒன்று திரண்டு அப்பாவி மக்கள் மீது பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளது.

விவசாய உள்ளீடுகள் மற்றும் மூலப் பொருட்களின் தட்டுப்பாட்டால் தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை வன்னி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடும் பிரயத்தனத்தின் மத்தியில் விவசாயிகளினாலும், கூட்டுறவுச் சங்கங்களினாலும் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளூர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.''

(சி)

# இலங்கைக்கு கிடைத்த பரிசுப் பொருள்: பட்டியல் தயாராவதாக அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதியாக, சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பதவியேற்ற தன் பின் வெளிநாட்டுத்தலைவர்களிடம் இருந்து இலங்கைக்குக் கிடைத்த பரிசுப் பொருட்கள் தொடர்பான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகிறன.

அமைச்சர் றிச்சர்ட் பத்திரன பாராளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

மேற்படி பரிசுப்பொருட்கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவநாணயக்காரா அண்மையில் பாராளுமன்றத்தில் வினா எழுப்பியிருந்தமையை அடுத்தே மேற்படி பட்டியல் இடும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை இந்த அன்பளிப்புப் பொருட்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

(உ)

# மலேசியாவில் வேலைவாய்ப்பு பெற விசேட தொழிற்பயிற்சிக்கு ஏற்பாடு

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், மலேசியாவில் தொழில்புரிய விரும்பும் இலங்கையர்க்கு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்பகட்ட பயிற்சிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதில் 47 பேர் இணைக்கப்பட்டுள்ளன.

இதேசமயம், இனிவரும் காலங்களில் மலேசியாவில் தொழில்பெற விரும்புவோர்க்கு மேற்படி பயிற்சிநெறி பெற்றமைக்கான சான்றிதழ் முக்கிய தகைமையாகக் கருதப்படவுள்ளதெனவும்,

மலேசியாவில் தற்காலிக தொழிலுக்கு ஆண்களை அனுப்புவதில்லை என்றமுடிவில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

[உ]

# பதிவாளர் நாயகம் திணைக்களம்:

# புத்தகம் கட்டுநர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மானிப்பாய்)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் புத்தகம் கட்டுநர் பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வில் சிங்களம் அல்லது தமிழ், ஆங்கில மொழி மற்றும் கணிதம் எண்கணிதம், வர்த்தக எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் புத்தகம் கட்டுவதில் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்றும் புத்தகம் கட்டுவதில் 6 வருட அனுபவமுடையவர்களுக்கு 8ஆம் வகுப்பு கல்வித்தகைமை போதுமானதுஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பதவிக்குப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பணிபுரியும் சிற்றூழியர்களும் விண்ணப்பிக்கலாம் என்றும் விண்ணப்பமுடிவு திகதி இம்மாதம் 30 திகதி என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(சி-120)

## நீர் பெற இயலாது அகதிகள் அவதி

(இணுவில்)

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தங்கி உள்ள 100க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த அகதிகள் குடிநீர் பெறுவதற்கும் ஏனைய தேவைகளுக்கும் நீர் பெற்றுக் கொள்வதற்குப் பெரிதும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர் பெற அலையவேண்டி உள்ளதாகவும் அகதிகள் கூறுகின்றனர்.

(சி-49)

## இலங்கை ரூபா பெறுமதி வீழ்ச்சி

இலங்கையில் அமெரிக்கா டொலரின் பெறுமதி 4 ரூபா 29 சதத்தால் அதிகரித்துள்ளதால் இலங்கை நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதிவீழ்ச்சி அடைந்துள்ளதாக நிதித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

75 ரூபா 18 சதமாக இருந்து ஒரு டொலர் தற்போது 79 ரூபா 47 சதமாக அதிகரித்துள்ளது.

(வ)

## மோதல்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் கொழும்புத்துறை, தனங்களப்பு பகுதிகளில் இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கொழும்புத்துறைப்பகுதியில் படையினர் நடத்திய ''ஸ்னைப்பர்'' தாக்குதலில் ஒரு புலி உறுப்பினர் உயிரிழந்துள்ளதாகவும் இதே வேளை தனங்களப்பு பகுதியில் பாதுகாப்பு முன் அரண்களுக்கு அப்பால் உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த புலிகள் மீதும் படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தியதாகவும் தகவல் நிலையம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

(சி-4)

## வாலிபர் மரணம்

(கொழும்பு)

வவுனியா ஆஸ்பத்திரியில் பலத்த காயங்களுடன்பொலிஸாரினால் அனுமதிக்கப்பட்டிருந்த வாலிபர்ஒருவர் மரணமாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போது தனது பெயர் பாலசிங்கம் என்று கூறியிருந்தாராம்.

இரு இளைஞர்கள் பொலிஸாரால் இவ்வாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர்களில் ஒருவரே மரணமானதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

(சி)

## கோட்ட, வலயமட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தீவக வலய வேலணை கோட்ட மட்டத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வலய மட்டப், போட்டிகள் எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நிகழும்' என்று தீவகவலய கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# தனியார் கல்வி நிலையத்தில் இயங்கும் அரசாங்கப் பாடசாலை

கட்டுடை சைவ வித்தியாசாலை அதே இடத்திலுள்ள லக்கி என்னும் தனியார் ரியூட்டரியில் இயங்கி வருகின்றது.

இப் பாடசாலையில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கி இருப்பதால் மாணவர்களும் ஆசிரியர்களும் மர நிழல்களிலேயே சில காலமாக தமது கல்வியைத் தொடர்ந்தனர்.

(க-120)

# கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் பொறுப்பு ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயற்பாடுகள் இனிமேல் ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்குமென ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா கைத்தொழில் அமைச்சராகக் கடமை ஆற்றவுள்ளார்.

இரத்மலானைக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி.குணரத்தின கொல்லப்பட்டமையை அடுத்து ஜனாதிபதி செயலகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

(வ)

## கண்டெடுக்கப்பட்டது

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த செல்வி வை. ஷகிலா என்பவரது கொழும்பு செல்வதற்கான விமானப் பயணச் சீட்டு கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

(சி)

# பரு. சித்த வைத்தியசாலை மந்திகை புதிய கட்டடத்தில் இயங்குகிறது

(புலோலி)

புலோலி கிராமக்கோடு பல்லப்பைவீதியில் உள்ளதனியார் கட்டடத்தில் இயங்கி வந்த பருத்தித்துறை பிரதேச சபையின் இலவச சித்தஆயுர்வேத வைத்தியசாலை அதற்கென மந்திகையில் சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டு அங்கு இயங்கிவருகின்றது

புதிய கட்டடம் பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் திரு ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனால் திறந்துவைக்கப்பட்டது.

இவ்விழாவின்போது சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருசான்ஸ், கரவெட்டிபிரதேசசபை உறுப்பினர் திரு. எஸ். உதயன் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டினர்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேசசபைத் தலைவர் திரு. எஸ். மணிபல்லவராஜன் வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத்தலைவர் திரு. என். திரிலோகநாதன், பருத்தித்துறை பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன், பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திரு. ஏ. நடராஜா ஆகியோரும் உரையாற்றினர்.

(சி-52)

## மாற்று ஒழுங்கு தேவையென கோரிக்கை

வலிகாமம் தெற்கு சங்குவேலி, சுன்னாகம், உடுவில் பகுதிப் பாடசாலைகளில் தங்கியிருக்கும் அகதிகளால் பாடசாலைகளை முழுமையாக இயக்க முடியவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்களோ பொதுஅமைப்புகளோ அகதிகளை வேறு இடங்களில் குடியமர்த்தி பாடசாலைகளை முழுமையாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாடசாலை அதிபர்கள்கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

(சி-49)

## பால்மா வழங்கினர்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதி முகாம்களில் தங்கியுள்ள ஒரு வயது குழந்தைகளுக்கு பேருட் ஆதரவுடன் இயங்கும் தம்பசிட்டி உயர் பட்டப்படிப்பு நிலைய மாணவர்கள் பால்மா பொதிகளை வழங்கியுள்ளனர்.

(சி-23)


STP

COMPUTER WORLD

54 A, PALALY ROAD,
KANTHARMADAM,
JAFFNA
T. P.: 2674
(தலைமை நிறுவனம்)

227. யாழ் வீதி,
மானிப்பாய்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாக)
(கிளை நிறுவனம்)

விரிவுரைகள் செய்முறை வகுப்புக்கள்

சகல விரிவுரைகளும், செய்முறை வகுப்புக்களும் ஆரம்பமாகியுள்ளதால் எமது நிறுவனத்தின் அனைத்து மாணவர்களையும் ஏதாவது ஒரு நிறுவனத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(இ/537) நிர்வாகம்



வாழ்த்துகிறோம்



அல்வாய் தவமஹால்

திரு. நடேசு துரைராஜா J. P. அவர்கள்

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)

வடமராட்சிப் பிரிவு விவாகப் பதிவாளராக நியமனம் பெற்றதையிட்டு மனமார வாழ்த்துகிறோம்.

மனோகரா சனசமூக நிலையம்.
அல்வாய். (1154)

விலங்குகள் பறவையினத்தின் அன்றைய

# சரணாலயம் இன்று, இடம் பெயர்ந்தோரின் புகலிடமாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களில சிலர் முன்னர் விலங்குகளை வளர்க்கப் பயன்படுத்தப்பட்ட கூண்டுகளில் தற்போது வாழ்ந்துவருகின்றனர்.

இவ்வாறு மானிப்பாயில் உள்ள சிறுவர் பூங்காவில் உள்ள விலங்குகள், பறவைகளின் அடைக்கப்படும் கூண்டுகளில் இவர்கள் வாழ்ந்து வருவது பலரின் மனதையும் உருக்கும் நிகழ்வாக உள்ளது.

குரங்கு, மான் மற்றும் பறவையினங்கள் இச்சரணாலயத்தில் பார்வைக்கு முன் வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-12)

# யாழ். போதனா வைத்தியசாலை இடம்மாறும் என்பது வெறும் வதந்தியே

## பணிப்பாளர் விளக்கம்

"யாழ். போதனா வைத்தியசாலை வேறிடத்திற்கு மாற்றப்படவுள்ளது என்று பலமாக, பரவலாக தற்போது குடாநாடு முழுவதும் பரவிவரும் வதந்தியில் எவ்வித உண்மையுமில்லை, அது வெறும் வதந்தியேதான்" என்று யாழ் போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி. நவமலர் கனகரத்தினம் நேற்று 'வலம்புரி'க்கு தெரிவித்தார்.

போதனா வைத்தியசாலை வேறிடத்துக்கு மாற்றப்படும் என்றும் அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்றும் பரவிவரும் வதந்தி முற்றிலும் தவறானது, ஆதாரமற்றது என்று பணிப்பாளர் தெளிவுபடுத்தினார். (சி)

# வடமராட்சியில் காலை மாலை நேர வகுப்புகள் நடைபெறும்

(புலோலி)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள மாணவர்களின் கல்வி வசதி கருதி வடமராட்சிக் கல்வி வலயத்தில் நான்கு பாடசாலைகளில் மாலைநேர வகுப்புக்கள் நடைபெறுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா தெரிவித்துள்ளார்.

யாக்கரு விநாயகர் வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இப் பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பகல் 1.15 மணிவரை இயங்கும். மாலைப் பாடசாலைகள் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 5.30 மணிவரை இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-52)

## தென்மராட்சி ப. நோ. கூ. சங்கம்

# வடமராட்சி வலிமேற்குப் பகுதிகளில் கிளைகளை ஏற்படுத்த நடவடிக்கை

(மந்திகை)

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கக் கிளைகளை வடமராட்சிவலிமேற்குபகுதிகளில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சங்கத்தின் உபதலைவர் எஸ் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்

இதன் முதல்கட்டமாக இக் கிளைகள் கரவெட்டி அத்துளு அம்மன் ஆலயத்திற்கு அருகிலும் நெல்லியடி ம. ம வித்தியாலய வீதியிலும் கிராமக்கோட்டுச் சந்தியிலும் இயங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, ஆகிய பிரதேசங்களிலும் வலி மேற்குப் பகுதியில் சண்டிலிப்பாய், சங்கானை, சித்தன்கேணி ஆகிய பகுதிகளிலும் இவற்றை இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (23-சி)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 29-04-1934 மறைவு: 23-05 2000

எமது குடும்பத்தலைவர் "திருப்பணிச் செல்வர்"

## முத்து இராசரத்தினம் (முத்தையா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22-06-2000 எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி: இ. செல்வராணி

'முருகன் இல்லம்'
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

மருமகன்: மா. விஜயஶ்ரீ
(பொறியியல் உதவியாளர்
இ. மி. ச. வவுனியா)
மக்கள்: பாமா (வவுனியா)
பிரபாகரன் (சுவிஸ்)
பாமினி (மருமகள் ,,)
சுதாகரன் (சுவிஸ்)
சத்தியபாமா
சதீஸ்கரன்
(சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
இரத்தினபுரி)

(1142)

# இடைக்கால நிர்வாகசபை;கூட்டணி நிலை பற்றி ரணில் கேட்டறிந்தார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு உத்தேச இடைக்கால நிர்வாக சபை பற்றி எவ்வாறுள்ளது என்பது பற்றி கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தனிடம் கேட்டறிந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை கூட்டணி எதிர்ப்பதாகவும் அவ்வாறு கிழக்கில் வாக்கெடுப்பு நடத்துவதாக இருந்தாலும் கூட மீண்டும் கிழக்கு மாகாணத்தில் முன்பிருந்த தமிழர்கள் குடியேற்றப்படவேண்டும். என்றும் இனவிகிதாசாரம் கிழக்கில் மாற்றப்பட்டுள்ளதாகவும் சம்பந்தன் ரணில்விக்கிரமசிங்கவிடம் கூறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்புநடத்த எவ்வன இருக்கிறது எனக் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் இச் செய்திகள் மேலும் கூறின. (சி)

## இலவச கணினிப்பயிற்சி

(கொழும்பு)

மேல்மாகாண பத்திரிகையாளரின் நலன் கருதி இலவச கணினிப்பயிற்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 100 செய்தியாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். (உ)

## மினிபஸ் கட்டணம் உயர்வு

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் மினிபஸ்களுக்கான கட்டணங்கள் முன்னறிவிப்பு ஏதுமின்றிஅதிகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கட்டண அதிகரிப்பு தொடர்பான திட்டவட்டமான எந்தவித அறிவித்தல்களும் மினிபஸ் சங்கத்தினரால் இதுவரை வெளியிடப்பட்டதாக தெரியவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## பரீட்சைக்கு பதிவுசெய்யவும்

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (உ. த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் அல்லது நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தில் பரீட்சைக்குரியகட்டணத்தை உடனடியாகசெலுத்திப்பெயரைப் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (சி)

## செஞ்சிலுவை வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

கீழே குறிப்பிடப்பட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றது.

ச. தர்மதேவன் மே/பா. ரத்தினசபாபதி 51 ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

G. சிவஞானசுந்தரம் உரும்பிராய்தெற்கு, உரும்பிராய்.

மாணிக்கம் சிவமூர்த்தி வீடியோகலாமினிஅச்சுவேலி.

எழுப்போலை சபாபதி புத்தூர் கிழக்கு, புத்தூர்.

சண்முகநாதன் உதயசீலன் மே/பா. துரைராசா கௌரி டெக்ஸ் உடுவில்.

ஜெயா மேரி குணரத்தினம் 61, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை. (உ)

## செயற்பாடு

(துன்னாலை)

சாவகச்சேரி பிரதேச சபையின் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை நெல்லியடி பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக உள்ள விக்னேஸ்வராக்கல்லூரி வீதியில் இயங்குகின்றது (சி-41)

## பூச்சிமருந்து

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ள சிறுவர்களுக்கு வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் பூச்சி மருந்து வழங்கப்படவுள்ளது. (உ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 22.05.1922 உதிர்வு 26.05.2000

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 66.ஜி.பி எஸ். வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. நாகமணி பொன்னுத்துரை என்பவர் 26 05.2000 அன்று காலமானார்.

அன்னாரின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் 25.06.2000 ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காட்டிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

66.ஜி.பி.எஸ் வீதி,
கல்வியங்காடு.

தகவல்
மனைவி: பராசக்தி
பெறாமகள்: பிறேமாவதி

(1166)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05—05—1923 மறைவு 22—06—1999

அமரர்

## யோசவ் செல்லத்துரை

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய் விளங்கிய அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

13, மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில்
மனைவி, சகோதரன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கொஞ்சஞ்சி மாதா ஆலயம் - யாழ்ப்பாணம், அந்தோனியார் ஆலயம் - மானிப்பாய், அந்தோனியார் ஆலயம் - கொச்சிக்கடை, லூர்து மாதா ஆலயம் - பிரான்ஸ், சூசையப்பர் ஆலயம் - கனடா, மாதா ஆலயம் - சுவிஸ், ஆகிய ஆலயங்களில் 22-06.2000 அன்று காலை 7.00 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்
ஜெறாட் (மகன்)

(1135)

ரீலி செய்த பாதும் ...
சால மிகுத்துப் பெயின் ...
நான்

# வலம்புரி

## செய்திகள் இனிக்கும்

செய்திகள் நம் நாட்டில் இனிப்பானவை. அவை செயல் வடிவம் பெற நீண்ட நெடுங்காலம் எடுக்கும். அன்றி சொல்லோடு சிதைந்து போவனவும் உண்டு இது தான் இந்த மண்ணின் சாபக் கேடு. இரட்டை நாக்குகள் நறுக்கப்பட வேண்டும். இல்லையேல் இந்த நாடு குட்டிச் சுவராகி விடும். அடிக்கரும்பு கடிப்பது போல் அக்கணம் இனிக்கும். செயல் வடிவம் பெறாது நுனிக்கரும்பு போல் துவர்க்கும். இந்த அனுபவங்களால் தான் வாக்குறுதிகளை நம்பத் தயக்கம் ஏற்படுகிறது.

சொல்வதைச் செய்யவும் செய்வதைச் சொல்லவும் மனங்கொள்ளவேண்டும். பொறுப்பான பணிகளைத் தாங்கிக் கொள்பவர்கள் கண்டிப்பாக அர்த்த புஷ்டியோடு பேசவும், பேசுவதை-துன்பம் உறவரினும் அவற்றைத் துணிவோடு செய்யும் தகமையையும் பெற வேண்டும்.

புரையோடிப் போன இப்பிரச்சினை என்னும் இரணத்தை ... யெறிவதெப்போ என இன வேறுபாடின்றி ... அங்கலாய்க்கிறார்கள். இது தான் கடைசி ... என்று ஏங்கி நிற்பவர்கள் ஏமாறவும் கூடாது. ஏமாற்றப்படவும் கூடாது.

அவலம் மலிந்த வாழ்க்கையை பூண்டோடு ஒழிக்க நாட்டிலே சமாதானம் ஒன்றே ... வேண்டும். புலிகள் விடிவிற்கு மக்கள் ... வேண்டி நிற்பது கிடைக்க வேண்டுமானால் உள ஸ்திரமும் உறுதிப்பாடும் அரசியல் தலைமைகளுக்கு வேண்டுமென்பது கூறித்தெரிவதில்லை.

சமாதானம் ஒன்றைப் பெறுவதற்கு எத்தனையோ தலைவர்கள், எத்தனையோ தடவைகள் முயன்றது போல் பாவனை செய்திருக்கிறார்கள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் நிலை ஒழிகின்ற நாளே சமாதானம் இந்நாட்டில் மலர வாய்ப்பிருக்கும். அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையிலான பிணக்கிற்கு அந்நியன் வர வேண்டிய நிலையை கடந்தகால தலைவர்கள் உருவாக்கி விட்டார்கள். நடந்தவற்றை நினைத்தோ விமர்சித்தோ பயனொன்றுமில்லை. நடக்கப்போவது நல்லபடியாக நடக்க வேண்டுமென்ற ஆதங்கமே மக்கள் உள்ளத்தில் உருவாகியிருக்கிறது.

ஆ ... ஆசிரிய

## பயண அனுமதி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள். வெளிமாவட்டம் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியை தாங்கள் தற்போது வதியும் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாம்களில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-12)

## இடம்பெயர்ந்து இயங்கும் பாடசாலை

(அரியாலை)

அரியாலையில் உள்ள பார்வதி வித்தியாசாலை, அ.த.க பாடசாலை, பூம்புகார் அ.த.க. பாடசாலை ஆகியன இடம்பெயர்ந்து தற்போது கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இயங்கிவருகிறது. [க-106]

# வை.கோ. இலங்கைநிலைவரம் பற்றி டில்லியில் பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து தற்போதைய இலங்கை நிலைவரம் குறித்து விரிவாக எடுத்துரைத்ததாக இந்தியச் செய்தி ஊடகம ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

தென்மராட்சிப்பகுதியில் நிகழ்ந்த அசம்பாவிததத்தின் போது ஏற்பட்ட அனர்த்தங்கள்குறித்து பாதிரியார் ஒருவர் தெரிவித்த கூற்றை மேற்கோள்காட்டி அவர் பிரதமரிடம் குறிப்பிட்டதாகவும் இச்செய்தி கூறியது.

அவர் பாதுகாப்புமந்திரி ஜோர்ஜ் பெர்னாண்டஸ் உட்பட பலமுக்கிய தலைவர்களையும் புதுடில்லியில் சந்தித்து இலங்கைநிலைவரம் குறித்துப் பேசியதாகவும் கூறப்பட்டது.

### டாக்டர் ராமதாஸ்

இதற்கிடையில் பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ்இலங்கை அரசின் உத்தேச நிர்வாக சபை ஏற்கக்கூடிய ஒன்றல்ல என்றும் விடுதலைப்புலிகள் பங்கேற்காத எந்த சபையும் பலன்தரப்போவதில்லை என்று கூறியதாகவும் இச்செய்தி மேலும் தெரிவித்தது.

### தொப்பூழ் கொடிஉறவு

இதற்கிடையில் ஈரோட்டில் நிகழவுள்ள தமிழர் எழுச்சி மாநாடுபற்றிய விளக்கக் கூட்டம் ஒன்றில் புதுக்கோட்டை மாவட்டம் காரைக்குடியில் பேசியதாகவும் அப்போது அவர், ஈழத் தமிழர்க்கும் தமிழகத்துத் தமிழர்க்கும் உள்ளஉறவு தொப்பூழ்கொடி உறவு அதை யாராலும் பிரிக்கமுடியாது என்று குறிப்பிட்டதாகவும் இச்செய்தி கூறியது. (சி)

## பாடசாலை மாணவர்கள் வரவு நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது

யாழ்.நகரப் பகுதியில் தற்போது இயங்கிவரும் பாடசாலைகளில் மாணவர் வரவு கணிசமான அளவு அதிகரித்து வருவதாகக் கல்விசார் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்வு, போக்குவரத்துச் சிரமம் போன்ற காரணிகளால் ஆரம்பத்தில் மாணவர் வரவு மிகக் குறைவாகவே காணப்பட்டது. எனினும் நாளுக்கு நாள் தற்போது நிலைமை சுமுகமாகி வருவதால் காலப்போக்கில் மாணவர் வரவு முன்னைய நிலைக்குத் திரும்பி விடும் என்ற நம்பிக்கை வலுவுறுகிறது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வடபிராந்திய போக்குவரத்துச் சபை சீரான பாடசாலைச் சேவை நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## மரக்கறி வாங்க கொண்டுசென்றபணத்தை இளைஞனிடம் பறிகொடுத்த வயோதிபர்

(யாழ்ப்பாணம்)

மரக்கறி, மீன் என்பன வாங்குவதற்காக சந்தைக்கு சென்ற வயோதிபர் ஒருவர் 70 ரூபா பணத்தினை அவ் வழியால் வந்த இளைஞன் ஒருவரிடம் பறிகொடுத்த சம்பவம் ஒன்று வல்வெட்டித்துறைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தை அடுத்து வயோதிபர் எதுவித பொருளும் வாங்காது வெறுமனே வீடு திரும்பினார்.

வல்வெட்டி மத்தியை சேர்ந்த சிற்றம்பலம் என்ற வயோதிபரே பணத்தைப்பறி கொடுத்தவராவார். (க-21)

## 33 வயதில் 24 வது பிள்ளைக்கு தந்தையான இந்திய இளைஞர்
### எல்லாமே தெய்வச்செயல்என்கிறார்

(புதுடில்லி)

33 வயதில் 24 வது பிள்ளைக்கு தந்தையாகி சாதனை புரிந்துள்ளார் இந்திய இளைஞர் ஒருவர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, இந்தியாவில், அஸாம் மாநிலத்தைச் சேர்ந்த 33 வயதான முகமத் அப்துல் என்ற சாதாரணகூலித்தொழிலாளியே 24 பிள்ளைகளுக்குத்தந்தையாகி இருக்கிறார்.

33 வயதில் 24 வது குழந்தைக்குத் தந்தையாகி இருப்பது குறித்து மிகவும் மகிழ்வுடன் இருக்கும் இவர், எல்லாம் ஆண்டவன் சித்தம் என மேற்படி சாதனை குறித்து திருப்தியுடன் காணப்படுகிறார்.

மூன்று பெண்களை மணம்முடித்துள்ள முகமத் அப்துல் தனது 23 வயதுடைய 3 வது மனைவி மூலம் மேற்படி சாதனை புரிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. [க-உ]

## இஸ்ரேல் அரசுடன் ஏற்பட்ட முரண்பாடு 4 முக்கிய அமைச்சர்கள் பதவிவிலகல்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில், பிரதமர் எஹுட் பராக்கின் கூட்டணி அரசாங்கத்தில் இருந்து ராஜினாமாச் செய்யப்போவதாக நான்கு முக்கிய அமைச்சர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த நான்கு அமைச்சர்களும் இஸ்ரேலின் அதி பழமைவாதக்கட்சியான சாஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

மேற்படி அமைச்சர்கள் நால்வரினதும் ராஜினாமாக்கள் இடம்பெறும் பட்சத்தில், கடந்த 11 மாதங்களாக ஆட்சி பீடத்தில் இருக்கும் எஹுட் பராக் அரசின் பெரும்பான்மைப்பலம் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமது கட்சியின் மதம் சார்ந்த பள்ளிக்கூடங்களுக்கு அரசு வழங்க வேண்டிய நிதி, மற்றும் சட்டபூர்வமற்ற வகையில் தம்மால் நடத்தப்படும் வானொலி நிலையத்துக்கு சட்டரீதியாக அனுமதி வழங்கல் ஆகிய விடயங்களில் மேற்படி அமைச்சர்களுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளே இவ் இராஜினாமா குறித்த அமைச்சர்களின் முடிவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இருப்பினும் இவர்களது இராஜினாமா முடிவினை சமரசப்பேச்சுக்களின் மூலம் தடுத்து நிறுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. [உ]

## பிரான்ஸ் ஆதரவு

(புதுடில்லி)

சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட விரிவான உலகளாவிய கோட்பாடு ஒன்றைக் கொண்டுவர பிரான்ஸின் ஆதரவை இந்தியா நாடியுள்ளது. (உ)

★ இந்தோனேசியாவில்

# மீண்டும்பெருமளவில் வன்செயல்கள் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் மொலுக்கன் தீவுகளில் மீண்டும் தலைவிரித்தாடும் வன்முறைச் சம்பவங்களில் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பெரும்பான்மையான ஆயுதம் தரித்த இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் செறிந்து வாழும் பகுதிக்குள் நுழைந்து தாம் புனிதப்போர் தொடுக்கப்போவதாக அறைகூவல் விடுத்ததையடுத்து இருபகுதியினர்க்குமிடையே வன்முறைகள் வெடித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்களில் 102 கிறிஸ்தவர்களும், 2 முஸ்லிம் ஆயுதபாணிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேசமயம், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தோனேசியாவில், வேண்டுமென்றே கிறிஸ்தவர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாகவும், இவற்றைக்கண்டும் காணாததுபோல் அந்நாட்டரசாங்கம் நடந்து கொள்வதாகவும் உலகில் பல தரப்புக்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## துன்பங்கள் அறியாயோ தலங்காவலனே

நீரோடு நிலவளமும் நிரம்பிய திருநெல்வேலியம் பதியில்
சீரோடு வளம் ஓங்க அருளாட்சி புரியும் தலங்காவலனே!
பாரோடு அடியவரை பாங்குறவே காத்தருள் புரிபவனே!
உவர் நீரை நன்னீராக்கி அடியார்
தம் தாகம் தீர்த்த அற்புதனே! ஐங்கரனே!
காணுமிடமெல்லாம் கருணை வடிவாக காட்சி தருபவனே!
இன்று தேர் ஏறி வீதிவலம் வரும் வேழமுகனே!
நம் மக்கள் படும் துன்பம் அறியாயோ விக்கினேஸ்வரனே
நம் இனம் காக்க தயங்குவது ஏனோ! பிள்ளையாரே!

எஸ். என். இராமச்சந்திரா.
திருநெல்வேலி.

(இன்று திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் தேர்த்திருவிழாவை யொட்டி இக்கவிதை பிரசுரமாகிறது.)

## சமரசத் திட்டம் பற்றிய தாய்வானின் அழைப்பை சீன அரசு நிராகரிப்பு

சீனா மற்றும் தாய்வான் தலைவர்களுக்கிடையே உச்ச நிலைச்சந்திப்பு நடத்தலாம் என்ற தாய்வான் நாட்டின் அழைப்பை சீனா அரசு நிராகரித்துள்ளது.

எந்தவொரு ஆக்கபூர்வமான பேச்சுக்கள் நடைபெறுவதற்கும் முன் சீனாவின் கொள்கைகளை தாய்வான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் பேச்சுக்கள் நடத்துவதால் பயனில்லை என சீனா அரசு தாய்வானிடம் தெளிவாகக்கூறியுள்ளது.

அண்மையில் வட தென் கொரியதலைவர்கள் சந்தித்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்களை நடத்தியது போன்று, இரு நாடுகளும் சமரசத்திட்டம் பற்றி அதிபர் நிலைச்சந்திப்புக்களை நேரில் நடத்தலாம் என தாய்வானின் அதிபர் சென்சுயிபாங் சீன அரசைக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. [உ]

## இடமாற்றம்

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதைத் தொடர்ந்து இக்கல்லூரி தற்போது மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கி வருகின்றது. (க-120)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் ஆலய இரதோற்சவம் ... காலை 1 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலையும் நடைபெறும். (ச)

## புதியநடைமுறை..

இதே வேளை இந் நடைமுறை இம் மாதம் 28 ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-4)

# திட்டமிடல் உள்ளிட்ட ஆட்சேர்ப்பு அனுமதி அட்டைகளைப் பெற முடியும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திட்டமிடல் சேவையின் இரண்டாம் வகுப்பு, இரண்டாந்தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 24ந் திகதியும்,

இலங்கை நீதிமன்றத்தில் இரண்டாந்தர பேச்சுப் பெயர்ப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 24ம், 25ம் திகதிகளிலும் நடைபெறுமென யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையத்திற்குப் பதிலாக யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியிலேயே இப்பரீட்சைகள் நடைபெறுமெனவும்,

தென்மராட்சிப் பகுதி தவிர்ந்த ஏனைய விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தென்மராட்சியைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தங்களுக்குரிய அனுமதி அட்டைகளைக் கொக்குவில இந்துக்கல்லூரியில் இயங்கும் யாழ். கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ந)

# தனியார் மருத்துவமனையில் இராணுவ மருந்துப் பெட்டிகள்

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினருக்குரிய இரண்டு மருந்துப் பெட்டிகளை ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு அருகிலுள்ள தனியார் மருந்தகம் ஒன்றிலிருந்து மீரிகம பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மருந்துப் பொருட்களைக் கைப்பற்றியவர் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி என்றும் அவரை மீரிகம பொலிஸார் கைது செய்து விசாரணை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பொலிஸ் அத்தியட்சகரின் சகோதரனே இம்மருந்துப் பொருட்களை எடுத்துச் சென்று விற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது. (ச-4)

# நேற்றைய கூட்டத்தில் எந்தமுடிவும் எடுக்கவில்லை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் வடக்குக் கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்தும் இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமாகவும் நேற்று அலரிமாளிகையில் நடந்த கூட்டத்தில் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் இரு தரப்பினரும் மீண்டும் நாளை 23 ஆம் திகதி கூடி இவை சம்பந்தமாக ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-வ)

# மரண அறிவித்தல்கள்

## விக்னேஸ்வரன் கௌரி

(7ம் வட்டாரம் நயினாதீவு)

7ம் வட்டாரம் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட விக்னேஸ்வரன் இராசம்மா தம்பதிகளின் மகளான கௌரி காலமானார்.

அன்னார் திருமதி பத்மஜோதி, பத்மநளாயினி, திருமதி சுனித்தா, உஷாலினி, பிரபாலினி, ஜெயபாரதி, பிரசன்னா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலம் சென்ற பூரணலிங்கம், கதிராசிப்பிள்ளை, காலம் சென்றவர்களான பரமலிங்கம், சற்குணம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மல்லாவியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மாமிமார்

திருமதி க இராசலக்சுமி (ராணி)

திருமதி ப. லலிதாம்பாள் (லாலா)

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு

(இ-541)

## செல்வி அருள்திரேசா சவிரிமுத்து (லீலா)

(ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நவாலி கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அருள திரேசா 20 6 2000 அன்று காலமானார்.

அன்னார். காலஞ்சென்ற கபிரியேல் சவிரிமுத்து, விக்ரோறியா சவிரிமுத்து ஆகியோரின் அன்புப் புதல்வியாவர் அன்னாரின் நல்லடக்கம் 21 6.2000 அன்று காலை 10 30 மணியளவில் நவாலி கல்லுண்டாய் கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

திருமதி விக்ரோறியா சவிரிமுத்து (தங்கப்பொன்) (தாய்)

386, பாங்ஷல் வீதி.

தற்காலி முகவரி,
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(1152)

## திருப்பதிப்பிள்ளை ஆறுமுகம்

கைதடி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கார்த்திகேசு ஆறுமுகத்தின் (உப தபாலதிபர் - கிளார்க்) அன்பு மனைவி திருப்பதிப்பிள்ளை ஆறுமுகம் 15-06 2000 அன்று காலமானார். அன்னார் கமலாதேவி சண்முகரட்ணம், சூரியகுமாரன் (சாலைப் பரிசோதகர் வ.பி போ. ச. கோண்டாவில்) சந்திரகுமார் (கைதடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும்; வைத்திய கலாநிதி பொ. சண்முகரட்ணம் (மத்திய மருந்தகம் - கைதடி) தயாபரி சூரியகுமாரன் (ஆசிரியை கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.) நாகேஸ்வரி சந்திரகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கருணானந்தன் (கணனிப் பொறியியலாளர் - நளினி கருணானந்தன் (நோர்வே), ஜெயமாலினி, ஜெயந்தினி (கணனிப் பொறியியல் மாணவி- நோர்வே), பரமானந்தம் (3ம் வருட மருத்துவ பீட மாணவன் ரஷ்யா), கோகுலரமணன் (க.பொ.த. உயர் தரகணிதம் யா/பரியோவான் கல்லூரி), மயூரன் (7 ஆம் தரம் யா/மத்திய கல்லூரி) ஆகியோரின்பாசமிகு பேர்த்தியும் அட்சயன், அபிசரன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16.6.2000அன்று அவரது கைதடி இல்லத்தில் நடைபெற்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்

ஆ. சூரியகுமாரன் (மகன்)

தற்போதையமுகவரி
சே.தேவராசா (ராஜர்)
புத்தூர் கிழக்கு
புத்தூர்

(1184)

## கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இல. 56, முள்ளிவீதி அரியாலை எனும் முகவரியைச் சேர்ந்த புவனேந்திரன் தனுஷா என்பவரின் தேசிய, விசேட அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந)

## சர்வஜன .-

கலந்துகொள்ளாத போதும் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதான முடிவைத் தாமும் ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளன.

புளொட் தலைவர் சித்தார்த்தனும், தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலர் குமரகுருபரனும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை தமது கட்சிகள் எதிர்ப்பதாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மலையக மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவரும் எம் பியுமான சந்திரசேகரன் ரெலோவின் சார்பில் எம் பி. செல்வம் அடைக்கலநாதன், ரெலோ முதல்வர் என். சிறிகாந்தா, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சார்பில்எம், பிக்களான பி.பி. தேவராஜ், எஸ்.இராஜரட்ணம், தேசியதொழிலாளர் காங்கிரஸ் சார்பில் எம். எஸ், செல்லச்சாமி ஆகியோரும் கலந்து கொண்டனர். [வ]

## இல தமிழர்களுக்கு --

ளாத வரைகரும்இந்தியா அப்பிரச்சினையில் தலையிடக்கூடாது என்றும் இந்தியா இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் உதவி மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகவும் அவ் உதவி வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்காது என்றும் ஜி. கே. மூப்பனார் தெரிவித்துள்ளார். (வ)

## திருமலையில் - - -

ரோந்து சென்ற படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சிறிய ஆயுதங்கள், மற்றும் எறிகணைகளின் உதவியோடு இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக விசேட ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (வ)

## சிலாபம் - - -

வரை நடத்திய தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தேடுதலில் 200க்கும் மேற்பட்ட பொலிஸார் பங்கு பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதான 27 தமிழரும் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ச)

## குமாரை...

அணிவகுப்பு நடைபெறவுள்ளது என்று குற்றப்புலனாய்வுப் பிரிவுப பணிப்பாளர் பந்துல விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் வேறு ஒரு குற்றத்தில் சம்பந்தப்பட்டு விசாரணையிலிருப்பதால் குமார் கொலை தொடர்பாக விசாரணை செய்ய சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறவுள்ளதாகவும் பந்துல விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

குமாரின் வீட்டில் வேலை செய்பவர்கள் இருவர் குமார் கொலை செய்யப்பட்ட அன்று குமாரைக் கூட்டிச் சென்றவரைக் கண்டுள்ளமையால் அவர்கள் அடையாளம் காட்டுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருத்தம்

நேற்று புதன்கிழமை வலம்புரியில் விரிவுரைகள் ஆரம்பம் என்ற தலைப்பில IIS இயக்குநரால் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு' எனத்தொடங்கும் பந்தியைத் தயவுசெய்து நீக்கி வாசிக்கவும்.

## வீரசிங்கம்..

கும்பாது அப்பணியில் ஈடுபட்ட சில தொழிலாளர்கள் வீரசிங்கம் மண்டபத்திற்கு கொண்டுள்ள பறைக்குள் அரிசி மூடைகளை மறைத்து திருட்டு முயற்சியில் ஈடுபட்டனர்.

இதனை அவதானித்த பொது மக்கள் கொடுத்த தகவலையடுத்துஸ்தலத்திற்கு விரைந்த உதவித்தபட பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் திருடப்பட்ட அரிசிமூடைகளை மீட்டனர்.

திருட்டைத் தடுப்பதற்காக களஞ்சியத்தை இடமாற்றி என்ன பயன் திருடர்களையல்லவா திருத்த வேண்டும் என்றார் விடயமறிந்த ஒருவர். (ந)


விவசாய டிப்ளோமா நுழைவுத் தேர்வு
விண்ணப்பப்படிவம் 23.06.2000 முதல் விற்பனைக்கு வரும்
விண்ணப்ப முடிவு திகதி 30-06-2000
பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [1177]

லஷ்சுமி
இணுவில்
நெப்போலியன், குஷ்பு நடித்த
கரிசக்காட்டுப் பூவே
(புதிய வெளியீடு)
10.30, 2.30 [ப.நே]
(கி/538)

நியூட்டன் (NEC)
342, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ SPOKEN ENGLISH
★ GAQ, B A - I
★ ஏனைய வகுப்புகளும்
ஆரம்பம்: 24-06-2000
காலை 8 மணி — 1 மணி வரை
ஆசிரியர்: BRITTO
[1170]

நாகம்ஸ்
சுன்னாகம்
கார்த்திக், ரோஜா, அஜித் நடித்த
இனிய பாடல்கள்நிறைந்த
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
(றீல்ஸ்)
11.00, 2.30 [பு.நே]
(கி/492)

தமிழ்ச்செல்வி உயர்கல்வி நிலையம்
மூளாய்
GCE. A/L
அளவையியல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
ஆசிரியர்: S.S. மனோகரன்
(இ-542)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ பனத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.